සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
ප්‍රාථමික කර්මාන්ත සහ සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
MINISTRY OF PRIMARY INDUSTRIES AND SOCIAL EMPOWERMENT

මගේ අංකය / எனது இல / My No: DSD/HO/07/SD/05/01-SK/2019
ඔබේ අංකය / உமது இல / Your No: ..............................
දිනය / திகதி / Date: 2019-06-12

சகல மாவட்ட செயலாளர்கள்/மாவட்ட மேலதிக பணிப்பாளர்
தலைமையதிபதிகள்
சகல மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள்.

**<u>சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக கலாச்சார மற்றும் இலக்கிய தேசிய போட்டிகள் - 2019</u>**

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழகங்களில் இணைக்கப்பட்டுள்ள பல்வேறு திறமைகளையுடைய சிறார்களின் இலக்கிய மற்றும் அழகியல் ரீதியான திறமைகளை மெருகூட்டுவதற்கு 2019ம் ஆண்டிலும் சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக இலக்கிய மற்றும் கலாச்சார போட்டிகளை (தமிழ்/சிங்களம்) வங்கி வலயம், பிரதேச செயலகப் பிரிவு, மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களிலிருந்து 03 வயதுத் தொகுதிகளினூடாக நடாத்தத் தீர்மானித்துள்ளது.

02. 2002ம் ஆண்டிலிருந்து 2018ம் ஆண்டு வரை மேற்படி தேசிய போட்டிகளை வெற்றிகரமாக செயற்படுத்தும் பொருட்டு தாங்களும் தங்களது பணியாளர்களும் வழங்கிய ஒத்துழைப்பினை நன்றியுடன் நினைவுகூர்கின்றேன். சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் செயற்படுத்தப்படும் சகல வேலைத்திட்டங்களினதும் முக்கிய குறிக்கோளானது மக்களிடம் எடுத்துச் செல்லக்கூடிய ஆற்றல் உள்ள பிரிவின் ஒன்றாக சிறுவர் கழகங்களில் இணைந்துள்ள சிறுவர்களைக் குறிப்பிட முடியும் என்பதுடன் போட்டிகளுக்கு மேலதிகமாக சிறுவர் கழக சிறுவர்களை சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் வேலைத்திட்டங்களை செயற்படுத்தும் பொருட்டும் இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

03. இங்கு கிராமிய மக்களின் வாழ்க்கையினை உயர்ந்த விதத்தில் நடாத்திச் செல்வதற்கு முன்னுரிமையினை வழங்கி ஆத்மீக அபிவிருத்தியினூடாக பொருளாதார அபிவிருத்தியினை வெற்றி கொள்வதற்கு <u>முக்கிய தடையாகவுள்ள போதைப்பொருள் மற்றும் புகைத்தலுக்கு எதிரான கருத்தொன்றினை கட்டியெழுப்பி போதை மற்றும் புகைத்தல் பாவனையானது பொதுமக்களின் வாழ்க்கையில் எவ்வளவு தூரம் தாக்கம் செலுத்துகின்றது என்பதனைக் தலைப்புக்களாகக் கொண்ட செய்திகளையுடைய பதாதைகளை</u> வங்கிச் சங்கங்களிலும், பிரதேச, மற்றும் மாவட்டப் போட்டிகள் நடைபெறும் இடங்களிலும் காட்சிப்படுத்தல் வேண்டும். இந்த பதாதைகளுக்கான மாதிரிகள் 04, இணைப்பு இலக்கம் 07 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மாதிரிகள் 04 ஐயும் அச்சிட்டு காட்சிப்படுத்துவது மிகவும் பொருத்தமானதாக அமையும். ஒரு பதாதையானது 06 அடி நீளத்தினையும் 03 அடி அகலத்தினையும் கொண்டதாக இருத்தல் வேண்டும். ஒரு பதாதையின் பொருட்டு செலவிடக் கூடிய உயர்ந்த பட்ச தொகையானது 1000/= ஆகும். சமுர்த்தி வேலைத்திட்டத்திற்கு ஒரு புதிய பிரச்சாரத்தினை வழங்குவதற்காக வங்கிச்சங்கம் ஒன்றில் ஒரு பதாதையினாவது காட்சிப்படுத்தல் வேண்டும்.

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

Tel- / Fax - / E-mail-

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General
011-2871672/2872202
011-2889002
dg@samurdhi.gov.lk

අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන) / பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்) / Director (Admin & Establishment)
011-2873799
011-2873996
diradmin@samurdhi.gov.lk
Hot Line :0112-889007

ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant
011-2869742
011-2869742
finance@samurdhi.gov.lk

අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance)
011-2889003
011-2887469
Hot Line:0112-885582

කාර්යාලය / அலுவலகம் / Office
0112872202
Hot Line: 011- 288772

04. வங்கிச் சங்கம், பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களின் போட்டி நிகழ்ச்சிகளை மத்தியஸ்தம் வகிக்கும் பொருட்டு அந்த விடயங்களில் நிபுணத்துவத்தினையுடைய உத்தியோகத்தர்களை நியமித்துக் கொள்ளல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு நியமித்துக் கொள்ளப்படுகின்ற மத்தியஸ்தக் குழுவினை பிரதேச செயலாளர் மற்றும் மாவட்டச் செயலாளரால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

05. மேற்படி 03ம் பந்தியின் பிரகாரம் பதாதைகளுக்கான செலவுகளையும் வங்கிச் சங்க மட்டத்தின் போட்டிகளின் பொருட்டு உயர்ந்த பட்சம் ரூபா 10000/= மற்றும் பிரதேச செயலகப் பிரிவு மட்டப் போட்டியின் பொருட்டு ரூபா 20000/= என்ற உச்ச பட்சத்திற்கு இசைவாக சமுர்த்தி கொடி வேலைத்திட்டத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட தொகையிலிருந்து குறித்த சமுதாய அடிப்படை அமைப்புக்களினூடாகவோ அல்லது தேவையான பிரகாரம் சமூக அபிவிருத்தி மன்றங்களிலிருந்தோ அல்லது செலவுகளை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு அங்கீகாரம் வழங்கப்படுவதுடன் அதன் பிரகாரம் முன் நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல் வேண்டும். மாவட்டப் போட்டிகளின் பொருட்டு செலவு மதிப்பீட்டினை தலைமைக் காரியாலயத்திற்கு சமர்ப்பித்ததன் பின்னர் நிதி ஒதுக்கீட்டினை விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

06. போட்டித் தொடர் பற்றிய பொதுவான ஆலோசனைகள் கீழே காட்டப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் முன் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

- இணைப்பு இலக்கம் 01 - பொதுவான போட்டி நிபந்தனைகள்
- இணைப்பு இலக்கம் 02 - போட்டிகளின் விபரம்
- இணைப்பு இலக்கம் 03 - சிங்கள மொழி மூல போட்டி நிகழ்ச்சிகள்
- இணைப்பு இலக்கம் 04 - தமிழ் மொழி மூல போட்டி நிகழ்ச்சிகள்
- இணைப்பு இலக்கம் 05 - கால வரையறை / செயற்படுத்தும் பொறுப்பும் அங்கீகரித்தலும்
- இணைப்பு இலக்கம் 06 - சிறுவர் கதைகளின் புள்ளிகளைப் பதிதல் (வலய மட்டத்திலிருந்தே )
- இணைப்பு இலக்கம் 07 - பதாதைக்கான வாக்கியத் தொடர்கள்

07. கடந்த வருடங்களைப் போன்று பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்களின் மாதிரிகளின் வரைகலை படங்கள் (Graphic) இரண்டினை மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகின்றேன்.

07. இந்த வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக்கிக் கொள்ளும் பொருட்டு தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பினைப் போற்றி மதிக்கின்றேன்.

எஸ்.ஈ.ஆர்.ரீ.எம்.எஸ்.பீ.பண்டார
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்:-

1. செயலாளர், ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு - த.அ.கொ.பொருட்டு
2. பிரதம கணக்காளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், - த.உ.ந.பொருட்டு
3. பிரதான உள்ளக கணக்காய்வாளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.உ.ந.பொருட்டு
4. சகல பணிப்பாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.உ.ந.பொருட்டு
5. சகல முகாமைத்துவப் பணிப்பாளர்கள்/ தலைமையக முகாமையாளர்கள் - த.உ.ந.பொருட்டு
6. சகல வங்கி வலய முகாமையாளர்கள் - த.உ.ந.பொருட்டு

TRANSLATED BY - M.M.M.JAHAR( Translator)

**இணைப்பு 01**

## பொதுவான போட்டி நிபந்தனைகள்

i. இப் போட்டித்தொடர் சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நடாத்தப்பட வேண்டியதுடன் அந்தந்த மொழிகளின் பிள்ளைகள் குறிப்பிட்ட மொழியில் மாத்திரம் போட்டியிடல் வேண்டும். தமிழ் அல்லது முஸ்லிம் பிள்ளை ஒருவர் சிங்கள மொழியில் கல்வி கற்பதாயின் அப்பிள்ளைக்கு சிங்கள மொழியில் போட்டியிட முடியும். சிங்கள மொழியின் பொருட்டு 14 போட்டி நிகழ்ச்சிகளும் தமிழ் மொழியின் பொருட்டு 10 போட்டி நிகழ்ச்சிகளும் உள்ளடங்குகின்றன.

ii. வயதுத் தொகுதியானது கீழ் குறிப்பிடப்படுகின்ற பிரகாரமாகும்.

| தொ.இல | வயதுத்தொகுதி | விபரம் |
|---|---|---|
| 01 | **வயது 15 இற்கும் 18 இற்குமிடைப்பட்டது**<br><br>**2001.12.31 இலிருந்து 2005.12.30 திகதி வரை** | (2001.12.31 திகதியிலிருந்து 2002, 2003, 2004, 2005.12.30ம் திகதி வரையிலான காலத்திற்குள் பிறந்த பிள்ளைகள் இவ் வயதுத் தொகுதிகளில் உள்ளடங்கும்)<br><br>2019. 12. 31   2019. 12. 31<br>2001. 12. 31   2005. 12. 30<br>வயது18. 00. 00   வயது : 14. 00. 01 |
| 02 | **வயது 11 இற்கும் 14 இற்குமிடைப்பட்டது**<br><br>**2005.12.31ம் திகதியிலிருந்து 2009.12.30ம் திகதி வரை** | (2005.12.31 திகதியிலிருந்து 2006, 2007, 2008, 2009.12.30ம் திகதி வரையிலான காலத்திற்குள் பிறந்த பிள்ளைகள் இவ் வயதுத் தொகுதிகளில் உள்ளடங்கும்.)<br><br>2019. 12. 31   2019. 12. 31<br>2005. 12. 31   2009. 12. 30<br>வயது :14.00. 00   வயது : 10. 00. 01 |
| 03 | **வயது 7 இற்கும் 10 இற்குமிடைப்பட்டது**<br>**2009.12.31ம் திகதியிலிருந்து 2013.12.30ம் திகதி வரை** | (2009.12.31ம் திகதியிலிருந்து 2010, 2011, 2012, 2013.12.30ம் திகதி வரையிலான காலத்திற்குள் பிறந்த பிள்ளைகள் இவ் வயதுத் தொகுதிகளில் உள்ளடங்கும்.)<br><br>2019. 12. 31   2019. 12. 31<br>2009. 12. 31   2013. 12. 30<br>வயது :10. 00. 00   வயது : 6. 00. 01 |

III. சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக அங்கத்தவர்கள் மாத்திரம் இப்போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டியதுடன் சமுர்த்தி வங்கியில் கணக்கொன்று இருப்பது கட்டாயமானதாகும். (சமுர்த்தி வங்கியில் கணக்கில்லாத எந்த ஒரு பிள்ளையையும் போட்டியில் கலந்துகொள்ளச் செய்யலாகாது என்பதனை சுட்டிக் காட்டுகின்றேன்) போட்டியின் ஆரம்ப கட்டம் வலய மட்டத்தில் ஆரம்பமானவுடனேயே சமுர்த்தி வங்கியில் சிறார்களுக்கான கணக்குகள் (கெக்குலு/சிசுறக்க) ஆரம்பித்திருத்தல் வேண்டும். புதிய கணக்கொன்றாயின் ஆகக் குறைந்தது ரூபா 500/= இற்கான மீதியும் பழைய கணக்கொன்றாயின் ரூபா 1000/= இற்கான ஆகக் குறைந்த மீதியாவது இருத்தல் வேண்டும். இதன் அடிப்படை நோக்கமானது சிறார்களின் சேமிப்பினை மேம்படுத்துவதாகும்.

iv. ஒவ்வொரு போட்டியிலும் வங்கிப்புத்தகங்கள், பிறப்புச் சான்றிதழ்கள் போன்றவைகளைப் பரீட்சித்து வங்கியில் கணக்கு ஆரம்பிக்கப்பட்ட தினத்தினை உள்ளடக்கி பட்டியலைத் தயாரித்து வலய மட்டத்தில் வெற்றி பெற்ற சிறுவர்கள் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளை தயாரித்த அட்டவணையுடன் முகாமைத்துவப் பணிப்பாளருக்கும், பிரதேச போட்டிகளில் வெற்றி பெற்ற பிள்ளைகளின் புள்ளிகளை தயாரித்த அட்டவணையினை மாவட்ட சமுர்த்தி சமூக அபிவிருத்தி விடய முகாமையாளருக்கும் மாவட்டப் போட்டியில் வெற்றி பெற்ற பிள்ளைகள் பெறுகின்ற புள்ளிகளை தயாரித்த பெயர்ப்பட்டியலை குறிப்பிட்ட தினத்தில் தலைமைக் காரியாலயத்திற்கும் கிடைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

v. உடரட்ட நடன (தனிநபர்) மற்றும் பகத்தரட்ட நடன (தனிநபர்) பக்க வாத்தியத்தின் பொருட்டு இருவர் தான் இருக்க வேண்டியதுடன் இதன் பொருட்டு கலைஞர்களை ஈடுபடுத்திக்கொள்ள முடியும். பாடலின் பொருட்டு சிறுவர் கழக சிறுவர்கள் இருவரை ஈடுபடுத்திக்கொள்ள முடியும். (எந்த வயதுத் தொகுதியிருந்தும் பாட முடியும்)

vi. இதற்கு முன்னைய வருடங்களில் தேசிய மட்டத்திலான போட்டியில் முதலாமிடத்தினைப் பெற்றுக் கொண்ட போட்டியாளர் ஒருவருக்கு மீண்டும் அவ் வயதுத் தொகுதியில் போட்டியிட முடியாது என்பதுடன் ஒரு சிறாருக்கு ஒரு தனிநபர் போட்டிக்கும் குழுப்போட்டிகளிலும் மாத்திரம் கலந்துகொள்ள முடியும்.

vii. குழுப் போட்டிகளில் நடனத்தின் பொருட்டு 12 சிறார்களும் பாடலின் பொருட்டு 4 சிறார்களும் கலந்துகொள்ள முடியும். வாத்தியத்தின் பொருட்டும் 4 பேரைக் கொண்டதாக அமைய வேண்டியதுடன் வாத்தியம் இசைக்க 4 பேர் இருக்க வேண்டியதுடன் அதன் பொருட்டு கலைஞர்களை ஈடுபடுத்திக்கொள்ள முடியும் என்பதுடன் வயதெல்லையும் கிடையாது. வாத்தியம் தவிர்ந்த கலந்துகொள்ளக்கூடிய உயர்ந்தபட்ச அளவானது 16 ஆகும். ஆகக்குறைந்தது பாடலும் உட்பட்டதாக 10 ஆகும்.

viii. போட்டித் தொடர் முழுவதிலும் (வலய, பிரதேச, மாவட்ட, தேசிய) நடனத்தில் ஈடுபடுத்தத் தேவையான இசையினை வழங்குவதற்கு சீடிக்கள்/பென்ரைவ், கையடக்கத் தொலைபேசியில் ஒலிப்பதிவு செய்தல் போன்றவைகளைப் பயன்படுத்துவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

ix. வலய, பிரதேச, மாவட்ட போட்டிகளில் நடுவர்களாக மூன்று பேரை கலந்து கொள்ளச் செய்வது கட்டாயமானதாகும் என்பதுடன் உத்தியோகபூர்வமாக பெறுபேறுகளை அறிவிக்கும் வரை உரித்துடையதற்ற எவருக்கும் பெறுபேறுகளை அறிந்து கொள்ள சந்தர்ப்பங்களை வழங்கலாகாது. குறித்த சட்டதிட்டங்கள் தொடர்பில் நடுவர் குழு உட்பட சகலருக்கும் அறிவித்தல் வேண்டும்.

x. வலயப் போட்டிகளை நடாத்தும் போது வங்கிக் கணக்கொன்று இல்லாத சிறுவர் ஒருவர் ஏதேனும் ஒரு விதத்தில் போட்டிகளில் கலந்து கொண்டாலும் ஏதேனும் மோசடிகள் ஏற்பட்டாலும் அதற்கான பொறுப்பினை வலய மட்டத்தில் வலய முகாமையாளரும் பிரதேச மட்டத்தில் முகாமைத்துவப் பணிப்பாளர் / தலைமையக முகாமையாளர்களரும் மாவட்ட மட்டத்தில் மாவட்ட விடய

முகாமையாளரும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். உரிய வயதெல்லையினைத் தாண்டிய சிறுவர்கள் இப் போட்டிகளில் கலந்து கொள்ளலாகாது.

xi. போட்டியில் கலந்துகொள்ளும் சிறார்கள் தங்களது அடையாளத்தை காட்டக்கூடியவாறு பொருத்தமான ஆடைகளை அணிந்திருத்தல் கட்டாயமானதாகும். (கிராமிய நடனங்கள் தவிர்ந்த) (உதாரணமாக சிங்கள மொழி மூல பெண்பிள்ளைகள் சிறுவர் சாரியும், ஆண்பிள்ளைகள் தேசிய உடையினையும் அணிந்திருத்தல் வேண்டும். தமிழ் மொழி மூல சிறுவர்கள் அவர்களுக்குப் பொருத்தமான தேசிய உடைகளை அணிந்திருத்தல் வேண்டும்.)

xii. உரிய கட்டங்களில் போட்டிகளை நடாத்தியதன் பின்னர் வெற்றி பெற்ற போட்டியாளர்களை மாத்திரம் அடுத்துவரும் போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்தல் வேண்டும். அத்துடன் போட்டி நிகழ்ச்சிகளில் ஆகக் குறைந்தது 5 போட்டியாளர்களும் குழுப்போட்டிகளில் 05 குழுக்களாவது இருத்தல் வேண்டும். (சகல போட்டிகளிற்கும்)

xiii. தேசிய போட்டிகளில் வெற்றி பெறும் சிறார்களுக்கான நிதி ரீதியிலான பரிசுகளை அவர்களது வங்கிக் கணக்குகளில் (சிசுரக்க/கெக்குலு) வரவு வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தேசிய போட்டிகளின் இறுதியில் குறித்த மாவட்டங்களுக்கு கீழ் குறிப்பிடப்படும் விதத்தில் நிதி விடுவிக்கப்படும். தேசிய போட்டிகளின் பின்னர் வெற்றி பெற்ற சிறார்களின் பரிசுத் தொகை மாவட்டங்களுக்கு அனுப்பப்படுவதுடன் உரிய சிறுவர்களின் கணக்குகளில் அப் பரிசுத்தொகை வரவாகியமையினை எழுத்து மூலம் தலைமைக்காரியாலயத்திற்கு அறிவித்தல் வேண்டும். மேலும் மாவட்ட மட்டத்தில் வெற்றி பெறும் சிறார்களுக்கான பரிசுத் தொகையினை வழங்கும் போது கீழே வழங்கப்பட்டுள்ள வரையறைகளை தாண்டலாகாது என்பதனை மேலும் அறியத்தருகின்றேன்.

| நிலை | தனிநபர் | கூட்டு |
|---|---|---|
| | தேசிய | தேசிய |
| முதலாமிடம் | 10000/= | 40000/= |
| இரண்டாமிடம் | 6000/= | 30000/= |
| மூன்றாமிடம் | 4000/= | 20000/= |
| திறமைகள் (இரண்டு) | ஒருவருக்கு 1500/= | ஒன்றுக்கு 10000/= |

xiv. போட்டிகளில் சிறுவர்களை ஈடுபடச் செய்யும் போது மோசடிகள் மற்றும் போலித்தனமான நடவடிக்கைகள் இருத்தலாகாது என்பதுடன் அவ்வாறான மோசடித்தன்மை ஏற்பட்டால் உரிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது என்பதுடன் எந்தவொரு உத்தியோகத்தருக்கும் வற்புறுத்தல்கள் அதன் பொருட்டு இருத்தலாகாது என்பதனை கடுமையாக சுட்டிக்காட்டுகின்றேன்.

**இணைப்பு 02**

## போட்டி விபரங்கள்

சகல போட்டிகளினதும் விபரங்கள் கீழுள்ள அட்டவணையின் பிரகாரமாகும் என்பதுடன் ஓவியம், சிறுவர் கதைகள், குறுநாடகம் செய்யுள் உறையுள் போட்டிகளின் பொருட்டான விபரங்கள் மாத்திரம் கீழே குறிப்பிடப்படுகின்றவாறாகும்.

I. ஓவியப் போட்டியின் பொருட்டு 18X14 அளவிலான பிரிஸ்டல்போட் அல்லது சித்திரம் வரையும் தாளைப்பயன்படுத்தவும். வெளிச்சம், இருட்டு மற்றும் முப்பரிமானப் பண்புகள் வெளிக்காட்டப்படுகின்ற விதத்தில் ஓவியத்தினை வரையச் செய்யவும். வெளியீட்டு ஓவியங்களை மாத்திரம் உருவாக்கிக் கொள்ள வேண்டியதுடன் அலங்கார ஓவியங்களை வரைதலாகாது. <u>பிளேடிக்னம், மற்றும் காபன் குமிழ்முனைப் பேனாக்களை பயன்படுத்தலாகாது.</u>

II. சிறுவர் கதைகள் போட்டியின் பொருட்டு 03 மணித்தியால காலத்தினை வழங்கி சிறுவர்களுக்கு தங்களது தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கமுள்ள சிறுவர் கதை ஒன்றினை எழுத சந்தர்ப்பத்தினை வழங்கி பூர்த்தி செய்த கதைகளை பெற்றுக்கொண்டதன் பின்னர் அதனை வங்கிச் சங்க மட்டத்திலும், பிரதேச செயலகப் பிரிவு மட்டத்திலும், மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களிலும் அக் கதைத்தொகுதியினை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட கதைத் தொகுதியின் பின் பக்கத்தில் புள்ளிகளை வழங்கும் பொருட்டு குறித்த படிவத்தினை பயன்படுத்துவது கட்டாயமானதாகும். (இணைப்பு இலக்கம் 06) சிறுவர் கதைத் தொகுதியினை உருவாக்கி பொறுப்பேற்றுக்கொள்ளும் போது அந்த நடுவர் குழு இது போட்டியில் கலந்து கொண்டு உருவாக்கப்பட்ட கதைத்தொகுதி ஒன்றாகும் என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

III. உறுதிப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழ் மற்றும் புள்ளிகளை வழங்கும் படிவப் புத்தகத்தில் கழறாதவாறு இணைத்து சிறுவர் கதை ஆக்கத்திறனை மாத்திரம் குறித்த தினத்திலோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாத சிறுவர் கதை ஆக்கங்கள் போட்டியிலிருந்து நிராகரிக்கப்படும்.

IV. சிறுவர் கதைகள் போட்டியின் பொருட்டு தேசிய போட்டிகளுக்கு பிள்ளைகளை கலந்து கொள்ளச் செய்யலாகாது என்பதுடன் அவர்களால் படைக்கப்பட்ட “சிறுவர் கதை ஆக்கம்” (சிறுவர் ஒருவர் போட்டிக்காக முன்னிலைப்படுத்துகின்ற சிறுவர் கதைப் புத்தகத்தில் போட்டியாளரின் பெயர், வயதுத் தொகுதி, பிரதேச செயலகப் பிரிவு, மற்றும் மாவட்டத்தினை தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.)

V. குறு நாடகப் போட்டியின் பொருட்டு ஏற்புடைய <u>**ஆத்மீக அபிவிருத்தி**</u> /<u>**சமூக ரீதியாக சமூகத்திற்கு சிறந்த செய்தி ஒன்றினை வழங்க கூடிய தலைப்பு ஒன்றினை தெரிவு செய்து கொள்ளல் வேண்டியதுடன் ஆகக் குறைந்த மேடை அலங்காரங்களை பயன்படுத்திக்கொள்ளல் வேண்டும்**</u>. (மேடையினை ஆயத்தப்படுத்த 05 நிமிடங்களுக்கு மேல் செல்லுமாயின் புள்ளிகள் குறைவதற்கு அது காரணமாக அமையும்.)

VI. செய்யுள், மற்றும் உறையுளின் பொருட்டு 02 மணித்தியால காலத்தினை வழங்கி சூழலைப் பாதுகாத்தலும் இயற்கை அழகும் மக்களின் வாழ்க்கையில் இணைந்துள்ள விதம் போன்ற தலைப்புக்களின் ஊடாக வர்ணனையுடன் உருவாக்குதல் வேண்டும்.

**இணைப்பு 04**

தமிழ் மொழியிலான போட்டிகள்

| தொ. இல | போட்டிகள் | வயதுத் தொகுதி | நேரம் | ஏனையவை |
|---|---|---|---|---|
| 01 | பாடல்<br>(சாதாரன பாடல்) | 7-10<br>11-14<br>15-18 | 3-5<br>நிமிடங்கள் | பெற்றோர் கௌரவ பாடல் அல்லது தேசாபிமான பாடல் ஒன்றினைப் பாடுதல் வேண்டும் |
| 02. | நாட்டார் பாடல் (தனிநபர்) | 7-10<br>11-14<br>15-18 | 3-5 நிமிடங்கள்<br>4-6 நிமிடங்கள்<br>5-7 நிமிடங்கள் | அபிநயத்துடன் (தாளங்களுடன்)முன்வைக்கப்படல் வேண்டும்<br>(மீனவர் பாடல், அரிவி வெட்டும் பாடல்,ஊஞ்சலாட்டப்பாடல்) |
| 03 | கிராமிய நடனம் (கூட்டு/கலவன்) அம்மன் கூத்து குறவர், காவடி, (கோலாட்டம் கூத்து படைப்புக்களாக உருவாக்கப்படல் வேண்டும். | 7-10<br>11-14<br>15-18 | 6-8<br>நிமிடங்கள் | நடனம் 12பேர் கைகோர்த்துப் பாடல் -04 பேர்<br>(சிறுவர் கழக பிள்ளைகளாக இருத்தல் வேண்டும். குழுவில் ஆகக்கூடியது 16 பேரும் ஆகக் குறைந்தது 10 பேரும் என்று இருத்தல் வேண்டும். பக்க வாத்தியத்திற்கு உயர்ந்த பட்சம் 04 பேரை பயன்படுத்த முடியும். |
| 04. | அறிவிப்பாளர் | 7-10<br>11-14<br>15-18 | 3-5 நிமிடங்கள்<br>4-6 நிமிடங்கள்<br>5-7 நிமிடங்கள் | குரல் வளம் வசன உச்சரிப்பு, கருத்துக்களை தெளிவாக விளக்குதல் ஆற்றுப்படுத்தல் என்பன தொடர்பில் கவனம் செலுத்தப்படும். |
| 05. | பேச்சு | 7-10<br>11-14<br>15-18 | 3-5 நிமிடங்கள்<br>4-6 நிமிடங்கள்<br>5-7 நிமிடங்கள் | நிகழ்ச்சிக்குரிய தலைப்பு மாவட்ட செயலகத்தினால் வழங்கப்படல் வேண்டும். |
| 06. | ஓவியம் | 7-10<br>11-14<br>15-18 | 03<br>மணித்தியாலங்கள் | பெஸ்டல் நீர்ச்சாயம் 18X14 பிரிஸ்டல் அட்டை ஓவியம் வரையும் தாள்.<br>அளவு – 18X14 அங்குலம் |
| 07. | சிறுவர் கதைகள் (திறந்த தலைப்பு) | 7-10<br>11-14<br>15-18 | 03<br>மணித்தியாலங்கள் | 150-200 வசனங்கள்<br>300-350 வசனங்கள்<br>500-550 வசனங்கள்<br>(திறந்த தலைப்புக்கள்)<br>சுய படைப்பொன்றான கதைப்பிரிவாக இருத்தல் வேண்டும் A4 அளவிலான தாளைப் பயன்படுத்தி உறுதிப்படுத்தப்பட்ட பிறப்பு சான்றிதழ் மற்றும் புள்ளி வழங்கும் படிவத்தினையும் புத்தகத்தில் கழறாதவாறு இணைத்து **“சிறுவர்** |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | **கதை ஆக்கம்"** என்ற சிறு புத்தமாக தயாரித்தல் வேண்டும். |
| 08. | குறு நாடகம் (சமுர்த்தி வேலைத்திட்டத்திற்குறியதாக மற்றும் நிகழ்காலத்திற்குப் பொருத்தமான விதத்தில் காலத்திற்கேற்ற தலைப்பு) | | 08-10 நிமிடங்கள் | (உதாரணமாக ஊடகப் பிரச்சாரமற்ற ஊடகம் ஒன்றாக சிறந்த நாடக தரத்தினை சுட்டிக் காட்டும் விதத்தில் படைத்தல் வேண்டும். **மேடை அலங்கரிப்புக்கள் ஆகக் குறைந்த விதத்தில் பயன்படுத்துவதற்கே புள்ளிகள் கிடைக்கப்பெறும் (மேடை ஆயத்தப்படுத்துவதற்கு 05 நிமிடங்களை விட கூடுதலாக எடுத்துக்கொள்வதாயின் புள்ளிகள் குறைய காரணமாக அமையும்)** |
| 09. | உறையுள் | 7-10 | உயர்ந்த பட்ச காலமானது 02 மணித்தியாலங்கள் | 150 – 200 சொற்கள் |
| | | 11-14 | | 250 - 300 சொற்கள் |
| | | 15-18 | | 450 – 500 சொற்கள்<br>சுற்றாடலைப் பாதுகாத்தல் மற்றும் சுற்றாடல் தொடர்புபட்ட கட்டுரைகளை வர்ணனைகளுடன் வரைதல் வேண்டும். உறையுளில் முழுப்பெயர், வயதுத்தொகுதி, மாவட்டம், பிரதேச செயலகப் பிரிவு, சிறுவர் கழகத்தின் பெயரை குறிப்பிடவும். |
| 10. | செய்யுள் | 7-10 | உயர்ந்த பட்ச காலமானது 02 மணித்தியாலங்கள் | நாலடிகளைக் கொண்ட வெண்பாக்கள் 06 |
| | | 11-14 | | நாலடிகளைக் கொண்ட வெண்பாக்கள் 08 |
| | | 15-18 | | நாலடிகளைக் கொண்ட வெண்பாக்கள் 12<br>சுற்றாடலைப் பாதுகாத்தல் மற்றும் சுற்றாடல் தொடர்பிலான உறையுளைத் தயாரித்தல் வேண்டும்.செய்யுளில் முழுப்பெயர், வயதுத்தொகுதி, மாவட்டம், பிரதேச செயலகப் பிரிவு, சிறுவர் கழகத்தின் பெயரை குறிப்பிடப்படல் வேண்டும் என்பதனை போட்டியாளர்களுக்கு விளக்கமளித்தல் வேண்டும். |

இணைப்பு 05

## கால வரையறை, செயற்படுத்தும் பொறுப்பு மற்றும் அங்கீகரித்தல் மற்றும் நிதி ஒதுக்கீடுகள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல போட்டிகள் வங்கிமட்டத்திலும் பிரதேச பிரிவு மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் செயற்படுத்தப்படல் வேண்டும். அந்தந்த மட்டங்களில் உத்தியோகத்தர்கள் சரியான விதத்தில் போட்டிகள் நடைபெறுகின்றதெனப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

| கட்டம் | செயற்படுத்தும் பொறுப்பு, மற்றும் அங்கீகரித்தல் | ஒப்படைக்கப்படுகின்ற பொறுப்புக்கள் | போட்டியினை நடாத்த வேண்டிய காலம் |
|---|---|---|---|
| வலய மட்டம் | பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக அபிவிருத்தி உதவியாளர்/ சமுர்த்தி வலய முகாமையாளர் | • கலந்து கொள்ளும் போட்டியாளர்களுக்கு வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல்.<br>• பிறப்புச்சான்றிழை பரீட்சிப்பதும் வெற்றி பெறுபவர்களின் பெயர்ப்பட்டியலைத் தயாரித்தலும்<br>• போட்டிப் பெறுபேறுகளை பிரதேச செயலாளருக்கு 2019-07-20ம் திகதிக்கு முன்னர் வழங்குதல் வேண்டும்.<br>• கண்காணிப்பின் பொருட்டு முகாமைத்துவ பணிப்பாளர் அல்லது தலைமையக முகாமையாளர் கலந்துகொள்வது கட்டாயமானதாகும். | 2019 ஜீலை 10ம் திகதிக்கு முன்னர் |
| பிரதேச செயலகப் பிரிவு மட்டம் | பிரதேச செயலாளர்/உதவிப் பிரதேச செயலாளர், தலைமையக முகாமையாளர்/முகாமைத்துவ பணிப்பாளர்கள் / சமூக அபிவிருத்தி உதவியாளர்கள் | • வங்கிக் கணக்குகள், பிறப்புச் சான்றிதழை பரீட்சித்தல்<br>• வலயத்தினால் வழங்கப்பட்ட வெற்றி பெற்றோரின் பட்டியலை பரீட்சித்து சரியான பட்டியலுக்கமைய போட்டிகளை நடாத்துதல்.<br>• வெற்றி பெற்றோர் பெயர்ப்பட்டியலை தயாரித்தல்.<br>• அப் பெயர்ப்பட்டியலை மாவட்டத்திற்கு 2019-09-10ம் திகதிக்கு முன்னர் வழங்குவது தொடர்பில் பொறுப்பேற்றல் | 2019 ஆகஸ்ட் 30ம் திகதிக்கு முன்னர் |
| மாவட்ட மட்டம் | மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், சமூக அபிவிருத்தி விடய முகாமையாளர் | • வங்கிக்கணக்குகள் பிறப்புச் சான்றிதழ்களைப் பரீட்சித்தல்<br>• பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட வெற்றி பெற்றோர் பெயர்ப்பட்டியலை பரீட்சித்து சரியான பெயர்ப்பட்டியலுக்கமைய போட்டிகளை நடாத்துதல்<br>• வெற்றி பெற்றோர் | 2019 செப்டம்பர் 30ம் திகதிக்கு முன்னர் |

| | | | |
|---|---|---|---|
| | | பெயர்ப்பட்டியலைத் தயாரித்தல்<br>• அப் பெயர்ப்பட்டியலை தலைமைக் காரியாலயத்திற்கு 2019-10-10ம் திகதிக்கு முன்னர் வழங்குவது தொடர்பில் பொறுப்பேற்றல் வேண்டும்.<br>• கண்காணிப்பின் பொருட்டு மாவட்ட பணிப்பாளர், சமூக அபிவிருத்தி பிரதிப் பணிப்பாளர், மாவட்ட சமூக அபிவிருத்தி முகாமையாளர்கள் கலந்து கொள்ளல் வேண்டும். | |
| தேசிய மட்டம் | பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர் (சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் ) பிரிவின் சகல உத்தியோகத்தர்கள் | பிறப்புச் சான்றிதழ் மற்றும் பெயர்ப்பட்டியலை பரீட்சித்து தேசிய போட்டிகளை நடாத்துதல் | 2019 நவம்பர் 10ம் திகதிக்கு முன்னர் |
| தேசிய வைபவம் | பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர் (சமூக அபிவிருத்தியும் சுற்றாடலும்) பிரிவின் சகல உத்தியோகத்தர்கள்) | தேசிய போட்டிகளிலிருந்து தெரிவு செய்யப்படுகின்ற வெற்றியாளர்களை பாராட்டுதல் | 2019 டிசம்பர் |

இப் போட்டிகள் நடைபெறும் கால எல்லைக்குள் மேலுள்ள பிரகாரம் குறித்த உத்தியோகத்தர்கள் பொறுப்புக்களை வகிப்பது கட்டாயமானதாகும் என்பதுடன் குறித்த போட்டிகள் நடைபெறும் நாட்களில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் கண்காணிப்பு நடவடிக்கைகளின் பொருட்டு உத்தியோகத்தர் மட்ட பிரதிநிதித்துவத்தினை கலந்து கொள்ளச் செய்வது கட்டாயமானதாகும்.

I. மாவட்ட மட்டம் வரை மாத்திரம் போட்டிகளை நடாத்தியதன் பின்னர் அந்தந்த போட்டிகளுக்குரிய வயதுத் தொகுதியிலிருந்து முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்ட பிள்ளைகள் தேசிய போட்டிகளின் பொருட்டு கலந்து கொள்ளச் செய்தல் வேண்டும்.

II. மேற்படி கால வரையறைக்கேற்ப போட்டிகளின் குறித்த மட்டத்தினைப் பூர்த்தி செய்ய வேண்டியதுடன் மாவட்ட போட்டிகளின் பெறுபேறுகளை 2019-10-10ம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள படிவத்திற்கமைய தெளிவாக தயாரித்து தலைமைக்காரியாலயத்தின் சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரிவிற்கு அனுப்புதல் வேண்டும்.

III. தேசிய போட்டிகளின் பொருட்டு பெயர்ப் பட்டியலை சமர்ப்பிக்கும் போது போட்டியாளர்களின் பெயர்களை பிழையின்றி குறிப்பிட்டு அனுப்புவதற்கு விசேட கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும் சிறார்களின் பெயர்களை முதலெழுத்துக்களுடன் ஆங்கில எழுத்தில் குறிப்பிடல் வேண்டும். தமிழ் மொழி மூல பெயர்களின் முழுப்பெயரை ஆங்கில மொழியிலும் தமிழ் மொழியிலும் அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்

**(கீழுள்ள படிவத்தினை மாத்திரம் பயன்படுத்தி குறித்த போட்டிகளின் பெறுபேறுகளை அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுட்டிக்காட்டுவதுடன் இதற்கு அப்பாற்பட்டதாக கிடைக்கின்ற எந்த பெறுபேறும் பொறுப்பேற்கப்படமாட்டாது என மேலும் குறிப்பிடுகின்றேன்)**

உதாரணம்:-

மாவட்டம்:-……………………………..

தனிநபர் போட்டியின் பொருட்டு

| தொ.இல | மாவட்டம் | பி.செ.பிரிவு | போட்டி நிகழ்ச்சி | வயதுத் தொகுதி | போட்டியாளரின் பெயர் | பெற்றுக் கொண்ட நிலை |
|---|---|---|---|---|---|---|
| தனிநபர் போட்டிகளின் பொருட்டு | | | | | | |
| 01. | கம்பஹா | கம்பஹா | பேச்சு | 7-11 | ஏ.டீ.இஷினி பாசிக்கா கொத்தலாவல | முதலாமிடம் |
| 02. | மாத்தறை | மாத்தறை | கிராமிய நடனம் (கூட்டு / கலவன்) | 15-18 | ஏ.டி.நயனா அனுத்தரா பெரேரா | முதலாமிடம் |
| | | | | | கைகோர்த்துப் பாடும் பொருட்டு இவ்வாறு 1-16 வரை பிழையின்றி குறிப்பிடல் வேண்டும் | |

**இணைப்பு 06**

மாவட்டம் :-.................................. பி.செயலக பிரிவு:-.................................. போட்டியாளரின் பெயர்:-..........................................

வயதுத் தொகுதி :-...................................... சிறுவர் கதையின் பெயர்:-..................................................

தயாரிக்கப்பட்ட சிறுவர் கதைப்புத்தகத்தில் புள்ளி பதியும் படிவத்தினை இணைக்கவும்

| தொ.இல | நடுவர்களின் பெயர்கள் | வலயப்போட்டிகள் | | | | | | நடுவர் குழுவின் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | உள்ளடக்கம் | மொழி | படைப்பாக்க நிலை | ஆற்றுப்படுத்தல் | கற்பனை | மொத்தப் புள்ளிகள் | |
| 01. | | | | | | | | |
| 02. | | | | | | | | |
| 03. | | | | | | | | |

| தொ.இல | நடுவர்களின் பெயர்கள் | பிரதேச போட்டிகள் | | | | | | நடுவர் குழுவின் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | உள்ளடக்கம் | மொழி | படைப்பாக்க நிலை | ஆற்றுப்படுத்தல் | கற்பனை | மொத்தப் புள்ளிகள் | |
| 01. | | | | | | | | |
| 02. | | | | | | | | |
| 03. | | | | | | | | |

| தொ.இல | நடுவர்களின் பெயர்கள் | மாவட்ட போட்டிகள் | | | | | | நடுவர் குழுவின் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | உள்ளடக்கம் | மொழி | படைப்பாக்க நிலை | ஆற்றுப்படுத்தல் | கற்பனை | மொத்தப் புள்ளிகள் | |
| 01. | | | | | | | | |
| 02. | | | | | | | | |
| 03. | | | | | | | | |

| | |
|---|---|
| மதுசாரம், போதைப்பொருள் பாவனையானது | மூடத்தனமான<br>மிருகத்தனமான<br>முட்டாள்தனமான<br>ஒரு செயலாகும் |

அப்பா....! ,இன்னுமொரு சிக்கரெட்டை பற்ற வைக்க முன்னர்
நாளை நோய்வாய்ப்படப்போவது நீங்கள்
தனிமைப்பபடுவது நாங்கள் என்பதனை நினைத்துப்பாருங்கள்

மதுசாரம் அருந்தி விட்டு ஆடும் நாடகங்களில்
உங்களது எச்சரிக்கையும்
எதிர்ப்புக்கும் இந்த நடவடிக்கைகளை
செயலிழக்கச் செய்யும்
அதற்கு மன்னிப்பையோ அனுமதியினையோ வழங்காதிருப்போம்

மதுசாரம் மற்றும் புகையிலை உபசரணைப் பட்டியலிருந்து நீக்கப்பட்டுள்ளது
புத்தாண்டு ஒன்றுகூடலில் சாராயம், பியர் பாவனையானது
சிறுவர்களை மதுசாரத்தின் பால் தழுவிச் செல்லும்
இவர்கள் உங்களது பிள்ளைகளில்லையா